லயத்திற்கு செல்வதற்கு உப்பளம் என்ற இடத்திலிருந்து செல்லலாம். அதிலே மண் சாலைகள் இருக்கின்றன. அதைப் போல பல்வேறு கிராமங்களுக்குச் செல்வதற்குப் பாதைகள் இருக்கின்றன. ஆகவே, அந்த வன விலங்குகளை அழிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று எங்களுடைய துறையின் சார்டாக அவர்கள் கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை ஏற்று மீண்டும் துறை பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 56. திரு. ஏ. எம். பரமசிவன், இருக்கையில் இல்லை.

வினா எண் 51, திரு. ஆ. அறிவழகன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

51—

மத்தகிரி காட்டுவாரி வாய்க்காலில் வெள்ளத்தடுப்பு சுவர் கட்டுதல்

9819—திரு. ஆ. அறிவழகன்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர், கீழ் காணும் வினாக்ளுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், குளித்தலை தாலுக்கா கிருஷ்ணராயபுரம் ஒன்றியத்திலுள்ள மத்தகிரி காட்டுவாரி வாய்க்காலில் வெள்ளத் தடுப்பு சுவர் கட்ட அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. அறிவழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் 1989 ஆம் ஆண்டு எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் போது அப்போது இந்த வினா எழுப்பப்பட்டது. மீண்டும் நம்முடைய ஆட்சி வந்த பிறகு இந்த வினா எழுப்பப்

பட்டது. இந்த மத்தகிரி காட்டுவாரியில் ஆண்டு ஆண்டு தோறும் மழைக் காலங்களில் அதிக வெள்ளம்பெருக் கெடுத்து ஓடுவதால் அந்தப் பகுதியில் இருக்கின்ற விளை நிலங் கள் குறிப்பாக விவசாயிகளின் கிணறுகள், பம்பு .செட்டுகள் மூடப்பட்டு மிகவும் பொருட் சேதமும், ஆட்சேதமும் ஏற்படு கிறது. அதே சமயத்தில் அதன் அருகில் இருக்கின்ற ஹைவேஸ் ரோடு பாதிக்கப்படுகிறது. இதனால் பஸ் போக்குவரத்திற்கும் தடங்கல் ஏற்படுகிறது. ஆகவே, நடப்பு ஆண்டில் இந்த மத்தகிரி காட்டுவாரியை அமைப்பதற்கு அரசு உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இந்த மத்தகிரி காட்டுவாரி என்பது வைய்ய மலையில் உற்பத்தியாகி ஐய்யனூர் ஏரிக்குச் செல்கிறது. ஏற்கனவே இது நீண்ட நாள் பிரச்சினை என்பதை இந்த அரசு அறியும். ஆகவே, அந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக் கின்ற விதத்தில் கடந்த காலங்களில் இருந்த அரசு செயற் படுத்தாவிட்டாலும் கூட நம்முடைய அரசு பொறுப்பு ஏற்றதற் குப் பின்னால் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆலோசனையின் பேரில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி வந்ததற்குப் பின்னால் உடனடி யாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, ரூபாய் 85 ஆயிரத்துக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அந்தப் பணிகளைச் செய்வதற்கு இருக்கிறோம், இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 52, டாக்டர் ச. ஆரோக்கியசாமி இருக்கையில் இல்லை.

திரு. எம். தங்கவேல், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச் சர்.

52—

திருச்சியில் புதிய பேருந்து நிலையம் அமைத்தல்.

10579—டாக்டர் ச. ஆரோக்கியசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?